Tamil Murasu 15/7/07 page 2

# பயங்கரவாதத்துக்கு எதிராகச் சமயப் பள்ளிகள்

ஜமா இஸ்லாமியா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதைத் தடுக்கும் இஸ்லாமியச் சமயப் பள்ளி ஆசிரியர்கள் நேற்று மதராஸா சமயப் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களுக்குப் பயங்கரவாதக் கொள்கைளை எதிர்த்துப் போராடப் பயிற்றுவித்தனர்.

ஆறு முழு நேர சமயப் பள்ளிகளிலிருந்து சுமார் 200 மாணவர்கள் நேற்று மதராஸா அல்ஜுனீடில் நடந்த கருத்தரங்கில் பங்கு பெற்றனர். அவர்களுக்கு, தீவிரவாதிகள் தம் சுய லாபத்துக்காக எவ்வாறு இஸ்லாம் சமயத்தைத் திரித்துக் கூறி வருகின்றனர் என்பதை ஐந்து உஸ்தாதுகள் விளக்கிக் கூறினர். இன்றைய மாணவர்கள் வருங் காலத்தில் சமயப் பள்ளியாசிரியர்களாகப் போவதால் இவ்வுண்மைளை அறிந்து கொள்வது அவர்களது கடமை என்றார் உஸ்தாது அலி.